# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108541

1. District மாவட்டம் : சிவகங்கை PS: காவல்நிலையம் Vigilance & Anti-Corruption Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 01/2021 Date: நாள் 12-01-2021

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended) Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Act 16 of 2018. Sections பிரிவுகள்: 7(a)
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 11.01.21 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு 15.00 Hrs Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12-01-21 Time : நேரம் 08.30 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-I Time : நேரம் 09.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக —

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 35 கி.மீ தெற்கே
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி VAO அலுவலகம், இளையான்குடி தெற்கு குரூப், சிவகங்கை மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் கருணாகரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கருப்பையா.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் - விவசாயம். (g) Address : முகவரி 3/440 நடுத்தெரு, அக்கரை, [illegible] இளையான்குடி தாலுகா, சிவகங்கை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.கணேசமூர்த்தி, கிராம நிர்வாக அலுவலர், தெற்கு இளையான்குடி குரூப், இளையான்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**No Delay**

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கிறேன்:- இன்று 12.01.2021 ஆம் தேதி காலை 08..30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது, திரு.கருணாகரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், தெற்கு இளையான்குடி குரூப், திரு.கணேசமூர்த்தி என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு, அவரின் நடத்தைகளை அறிந்தும், புகார் மனுவில் ஊழல் தடுப்பு சிட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து, பின் அன்னாரின் அனுமதி பெற்று 12.01.2021 ஆம் தேதி 09.00 மணிக்கு, சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/2021, U/s. 7(a) of Prevention of Corruption Act 1988 (as amended in) Act 16 of 2018 என வழக்கு

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. Karu... 12.01.2021

12/01/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

12.01.21.

Name: பெயர் ..........................
Rank: நிலை ......................No. எண் ..........

காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு,
சிவகங்கை மாவட்டம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.10(HCL-12)p.2

பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு:- **அனுப்புனர்:-** K.கருணாகரன், S/o.கருத்தையா, 3/440, நடுத்தெரு, அதிகரை, ரெகுநாதமடை அஞ்சல், இளையான்குடி தாலுகா, சிவகங்கை மாவட்டம். **பெறுநர்,** உயர்திரு காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, சிவகங்கை. அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனது தந்தையார் 1208.2005 ஆம் தேதியன்று இறந்துவிட்டார். இது சம்பந்தமான இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் என்னிடம் உள்ளது. மேலும் எனது தந்தை P.கருத்தையா அவர்கள் பெயரில் சிவகங்கை மாவட்டம், இளையான்குடி தாலுகா, தெற்கு இளையான்குடி குரூபில் உள்ள பட்டா எண்கள் 196 மற்றும் 197-ல் உள்ள சொத்துக்களை எனது பெயரில் பட்டா மாற்றுவதற்கு வேண்டி வேண்டி 04.01.2021 ஆம் தேதி இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் உள்ள தனியார் இ-சேவை மையத்தில் ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்தேன். நான் விண்ணப்பம் செய்தமைக்காக, மேற்படி இ-சேவை மையத்தில் இருந்து நான் பணம் ரூ.60/- செலுத்தியதற்கான ஒப்புகைச்சீட்டு எனக்கு வழங்கப்பட்டது. மேற்படி விண்ணப்பம் செய்தமைக்கு, எனக்கு வழங்கப்பட்ட ஒப்புகைச்சீட்டில் எனது விண்ணப்ப எண்ணாக 2021/0103/23/101873 என்ற எண் வழங்கப்பட்டுள்ளது. பின் இது சம்பந்தமாக தெற்கு இளையான்குடி குரூப் V.A.O திரு.கணேச மூர்த்தி என்பவரை 11.01.2021 ஆம் தேதி பிற்பகல் 03.00 மணியளவில் நேரில் சந்தித்து பட்டா மாறுதல் சம்பந்தமாக கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் இருந்து சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மற்றும் அதனுடன் தனக்கு லஞ்சமாக ரூ.4000/-ம் கேட்டார். அதற்கு நான் தற்போது என்னிடம் பணம் இல்லை ரெம்ப கஷ்டப்படுகிறேன் என்று சொன்னேன். அதற்கு VAO திரு.கணேச மூர்த்தி என்னை பார்த்து தனக்கு லஞ்ச பணம் ரூ.4000/- கண்டிப்பாக கொண்டுவந்தால்தான், எனக்கு பட்டா மாறுதலுக்கு சிபாரிசு செய்வேன் என்று கூறினார். அதற்கு நான் சரி என்று சொல்லி, மிகுந்த மன வருத்தத்துடன் அவரின் அலுவலகத்தில் இருந்து வெளிவந்தேன். இந்நிலையில் பட்டா மாறுதலுக்கு சிபாரிசு செய்வதற்கு VAO திரு.கணேச மூர்த்தி என்னிடம் ரூ.4000/-ம் லஞ்சம் கேட்டதால் மிகவும் மனவேதனை அடைந்தேன். மேலும் எனக்கு லஞ்சம் கொடுத்து பட்டா மாறுதல் உத்தரவு வாங்க விருப்பம்

இல்லாததால், எனக்கு பட்டா மாறுதல் வழங்குவது சம்பந்தமாக, தலைமையிடத்து வட்டாட்சியர் அவர்களுக்கு பரிந்துரை செய்வதற்கு ரூ.4000/-ம் லஞ்சமாக கேட்ட தெற்கு இளையான்குடி குரூப் VAO திரு.கணேச மூர்த்தி என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி தங்களை கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் திரு.கருணாகரன், 12.01.2021.

Sir, received the complaint in 12.01.2021 at 08.30 hrs and conducted confidential enquiry. I registered a case in Sivagangai, Vigilance and Anti-Corruption in Crime No.01/2021, U/s 7(a) of Prevention of Corruption Act 1988 (as amended in) Act 16 of 2018 on 12.01.2021 at 09.00 hrs, sd.M.Chandran, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Sivagangai Detachment.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

12.01.21.

Inspector of Police
Vigilance & Anti- Corruption
Sivagangai.